# தேங்காய் மற்றும் கொப்பரை விலை ஜனவரி, 2016 வரை நிலையாக இருக்கும்

உலகளவில், தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தோனேசியா மற்றும் மலேசியா நாடுகளுக்கு அடுத்ததாக இந்தியா மூன்றாம் இடம் வகிக்கிறது. 2014-15ம் ஆண்டில் 2.15 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 16.56 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு, தேங்காய் உற்பத்தியில் 32 சதவீதம் பங்களிப்புடன் நாட்டில் முதலிடம் வகிக்கிறது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர் மற்றும் தேனி ஆகியவை தென்னை சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தற்போது தேங்காய் டன்னிற்கு ரூ.20,000 - ரூ.21,000 வரை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. சராசரியாக 550 - 600 கிராம் எடை அளவு கொண்ட ஒரு தேங்காய் ரூ.11 முதல் ரூ.12 வரை விற்கப்படுகிறது. பரவலாக பெய்து வந்த மழையின் காரணமாக தென்னை சாகுபடி செய்யும் மாவட்டகளில் இருந்து அதிக வரத்து வரத் துவங்கியுள்ளது. மேலும், கர்நாடகவிலிருந்தும் பருவத்திற்கு முன்னதாகவும், அதிகளவிலும், வரத்து வர துவங்கியுள்ளது. வரும் பண்டிகை காலத்தில் தேவை அதிகரித்தாலும் அதிக வரத்து காரணமாக தேங்காய் விலை நிலையாக இருக்கும். தற்போது கொப்பரை கிலோவிற்கு ரூ.70 - 72 வரை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. மேலும் இந்தியாவிலிருந்து தேங்காய் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி தேவை கடந்தாண்டை விட தற்போது குறைந்துள்ளது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் நிலவி வரும் தேங்காயின் விலை மற்றும் கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

ஆய்வுகளின் அடிப்படையில், அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் பண்ணை விலை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சராசரியாக 550 - 600 கிராம் எடை அளவு கொண்ட தேங்காய் ஒன்றிற்கு ரூ.12 முதல் 13 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை கிலோவிற்கு ரூ.68 முதல் ரூ.70 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஜனவரி, 2016க்கு பின் விலை குறைய வாய்ப்பு

உள்ளது, எனவே, விவசாயிகள் மேற்கூறிய விலைகளின் அடிப்படையில் தேங்காய் அறுவடை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி :- 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி எண் :- 0422-6611284